ISSN:2582-9513
Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)

# நாடக மரபில் சரபேந்திர பூபாலக் குறவஞ்சி

பேரா.பெ.காளியானந்தம் & முனைவர் கா.கணநாதன்
தமிழ்த்துறை, தமிழ் பண்பாட்டு மையம்,
அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி,
சிவகங்கை மாவட்டம்

18

**ஆய்வுச்சுருக்கம்**

தமிழுக்கு நல்லதொரு நாடக மரபு உள்ளது என்பதை அனைவரும் அறிவோம். தொன்மைக் காலம் முதல் இன்று வரை அவ்வரலாறு காட்டும் உயரிய கருத்துக்கள் மனிதனின் உணர்வையும் உள்ளத்தையும் கவரும் தன்மையுடையது. அது தமிழனின் பண்பாட்டுச் செல்வத்தை மிகுதியாகத் தன்னகத்தே கொண்டு தமிழன்னையே பொலிவு செய்து கொண்டே வருகிறது. இத்தகைய நாடக வளர்ச்சியில் குறவஞ்சி இலக்கிய வகையும் ஒன்றாகும். இதன் கரு தொல்காப்பியத்தில் காணப்படுகிறது. களவுக் காலத்தில் தலைவி தலைவனைப் பிரிந்து வாடுகின்றாள். இதனை வளர்ப்புத்தாயும் பெற்ற தாயும் காண்கின்றனர். தலைவியின் துன்பத்திற்கான காரணத்தை அறிய முயல்கின்றனர். முருகனால் நோய் ஏற்பட்டுள்ளதா என்று அறிவதற்காக வேலன் என்பவன் குறிபார்ப்பான். தொல்காப்பியத்தில் இடம்பெற்றுள்ள இத்தகைய "குறிபார்த்தல்" என்பதைக் கருவாகக் கொண்டு பிற்காலத்தில் குறவஞ்சி என்னும் இலக்கிய வகை தோன்றியது எனலாம்.

சிற்றிலக்கிய வகைகளில் ஒன்றான குறவஞ்சியில் பாட்டுடைத் தலைவன் உலா வரக் கண்ட தலைவி ஒருத்தி, அத்தலைவன் மீது காதல் கொண்டு அவனை அடையத் தவிக்கும் நிலையில் குறவர் குலத்தைச் சார்ந்த பெண் ஒருத்தி அத்தலைவிக்குக் குறி கூறிப் பரிசில் பெறும் செய்திகளைக் கூறுதலால் குறவஞ்சி என்னும் பெயர் பெற்றது. இலக்கணங்களைக் கொண்ட சரபேந்திர பூபாலக் குறவஞ்சியும் ஒன்றி தமிழ்நாட்டில் உள்ள தஞ்சாவூரை முன்பு பல மன்னர்கள் ஆண்டு வந்தனர். அவர்களுள் சரபோஜி மன்னரைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர் இயற்றிய "சரபேந்திர பூபாலக் குறவஞ்சி" நூலின் அமைப்பையும் சிறப்பையும் பதிவு செய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**திறவுச்சொற்கள்** - குறவஞ்சி - சிவக்கொழுந்து தேசிகர் - சரபோஜி மன்னன் - பாடல் நடை - 19 தமிழ் வருடப் பெயர்கள்.

**முன்னுரை**

சிற்றிலக்கிய வகைகளில் குறிப்பிடத்தக்க இலக்கியம் குறவஞ்சி ஆகும். தலைவனை நினைத்து வாடும் தலைவியைக் கண்டு குறக்குறி கூறுவது குறவஞ்சி இலக்கியம் ஆகும். இந்நூல் இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழைக் கொண்டது. குறம், குறத்திப்பாடு, குறவஞ்சி நாடகம், குறவஞ்சி நாட்டியம் எனும் பெயராலும் குறவஞ்சி இலக்கியம் அறியப்படுகிறது.

**"கட்டினும் கழங்கினும் வெறியென இருவரும்**
**ஒட்டியத்திரத்தால் செய்திக் கண்ணும்"**

**(தொல்.பொருள்.களவியல்.25)**

எனும் தொல்காப்பிய நூற்பாவின் அடிப்படையில் தோன்றியது.

குறவஞ்சி என்பது தொல்காப்பியர் கூறும் வனப்பு என்ற நூல்வகையுள் அடங்கும் குறிஞ்சி நிலத்தை அடிப்படையாகக் கொண்டது.

சங்க இலக்கியங்களில் குறமகள் தெய்வ ஆவேசமுற்றவளாகக் காட்டப்படுகிறாள். அவ்வகையில் குறிசொல்லும் மகளிரை ஔவையார் தன் குறுந்தொகைப்பாட்டில்,

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

**“அகவன் மகளே! அகவன் மகளே**

**மனவுக் கோப்பன்ன நன்னெடுங்கூந்தல்**

**அகவன் மகளே! பாடுக பாட்டே**

**இன்னும் பாடுக பாட்டே, அவர்**

**நன்னெடுங் குன்றம் பாடிய பாட்டே”**

**(குறுந்தொகை - 23)**

எனும் பாடலில் “அகவன் மகளே” என்று குறமகளை அழைக்கிறார். குறவஞ்சி அகஇலக்கிய நூலாக இருப்பினும் தலைவன் தலைவி பெயர் கூறப்படும்.

குறவஞ்சி பல வகைப்பாக்கள் கலந்து வரப்பாடப்படும். குறவஞ்சி இலக்கியத்திற்கு முன்னோடி அடிப்படை நூல் குமரகுருபரரின் மீனாட்சிக் குறம் தமிழின் முதல் குறவஞ்சி நூல் குற்றாலக் குறவஞ்சி ஆகும். பன்னிரு பாட்டியல் குறவஞ்சியை

“இறப்பு நிகழ் வெதிர் வென்னும் முக்காலமும்

திறம்பட உரைப்பது குறத்திப்பாட்டே”

என்கிறது.

**குறவஞ்சி நூல்கள்**

பாட்டுடைத் தலைவன் உலாவரக் கண்ட தலைவி ஒருத்தி அத்தலைவன் மீது காதல் கொண்டு அவனை அடையத் தவிக்கும் நிலையில் குறவர் குரத்தைச் சார்ந்த பெண் ஒருத்தி அத்தலைவிக்கு குறி சொல்லிப் பரிசு பெரும் செய்திகளைக் கூறுவதால் குறவஞ்சி என்னும் பெயர் பெற்றது.

குறவஞ்சிப் பாடல் நாடகங்கள் துவக்கத்தில் வசதி படைத்தோருக்காக ஆடப் பெற்றாலும் அவற்றின் குறவஞ்சியில் பல விதம் உண்டு. அவற்றுள்

“குறத்தி குறி கூறுவதுங் குறவனுடன் பேசி அளவளாவுமதுமாகிய செய்திகள் தலைமை பெறப் பாடும் குறவஞ்சி ஒரு பிரபல விதமாகும். குறிஞ்சி நிலத்தின் செய்திகளைக் குறவஞ்சி வருணிக்கும் சேரி வழக்கு முதலியன இதில் இடம்பெறும். (ஈழர்த்துத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம் - நூலகத் திட்டம் - 2006)

**பாட்டுடைத் தலைவன்**

சரபோஜி மன்னர் தஞ்சையை ஆண்ட மராட்டி மன்னர் துளஜாஜியால் தன் அரியணைக்கு வாரிசாகத் தத்தெடுக்கப்பட்டவர். இவருக்கு முன் சரபோசி என்ற பெயரில் ஒரு மன்னர் ஆண்டிருந்தமையால் இவர் இரண்டாம் சரபோசி என அழைக்கப்பட்டார். துளஜாஜி தன் விருப்பக் கடவுளான திரிபுவனம் சரபேசர் பெயரை சரபோஜி எனத் தன் மகனுக்கு இட்டார். சரபோஜி மன்னர் 1398-ல் ஆண்டில் பொறுப்பை ஏற்றார். சரபோஜி மன்னர் மராட்டி தமிழ், ஆங்கிலம், ஜெர்மன், கிரேக்கம்,இலத்தீன்,வடமொழி,தெலுங்கு முதலிய மொழிகளில் பெரும்புலமை பெற்றவர். தஞ்சாவூரில் சரஸ்வதி மகால் என்ற நூல் நிலையத்தை நிறுவினார். இன்றியமையாத நூல்கள் பலவற்றை பதிப்பிப்பதற்காக அச்சகம் ஒன்றையும் நிறுவினார். தம் அரண்மனையில் அரும்பொருள் காட்சி நிலையத்தையும் ஏற்படுத்தினார்.

**நூல் அமைப்பு**

சரபேந்திர பூபாலக் குறவஞ்சி என்னும் சிற்றிலக்கிய வகையைச் சார்ந்த இந்நூலின் முதல் பகுதியில் சிறப்புப் பாயிரம், காப்புச் செய்யுள், கட்டியக்காரன் வருகை, கணபதி வருகை ஆகியன இடம்பெறுகின்றன. பின்னர் பாட்டுடைத் தலைவனாகிய சரபேந்திரர் உலா வருகின்றார்.

அவ்வுலாவைப் பந்து விளையாடிக் கொண்டிருந்த மதனவல்லி என்ற பெண் பார்க்கிறாள். தலைவர் மேல் காதல் கொள்கிறாள். உலா மதனவல்லியைக் கடந்து செல்கிறது. மதனவல்லி காதல் துன்பத்தால் வருந்துகிறாள். தன காதலைத் தெரிவித்து தலைவனிடம் தோழியைத் தூது அனுப்புகிறாள்.அப்போது குறத்தி வருகிறாள் குறத்தியை அழைத்து தலைவி குறி கேட்கின்றாள். குறத்தி உன் விருப்பம் நிறைவேறும் என குறி சொல்கிறாள். அப்போது குறத்தியைத் தேடி அவள் கணவன் சிங்கன் வருகின்றான். அவன் குறத்தியைக் காணாது வருந்துகின்றான். மகிழ்ச்சியடைகிறான் இறுதியில் மங்களம் என்ற பகுதி இடம்பெறுகிறது. குறத்தி தன் மலைவளம் கூறுதல். குறவன் குறத்தி உரையாடல், குறத்தி குறி உரைத்தல் இவை சுவைப்படச் சொல்லப்பட்டுள்ளது.

இடையிடையே விருத்தம், அகவல், வெண்பா முதலிய செய்யுட்களையும் வசனத்தையும் கலந்து கீர்த்தன வடிவமாக அமைந்துள்ளது படிப்போர் எளிதில் அறியும் வண்ணம் எளிய நடையில் அமைந்துள்ளது. சரபோஜி மன்னர் பாட்டுடைத் தலைவனாக இருப்பினும் இந்நூல் தஞ்சைப் பெருவுடையரின் சிறப்பும் மகாராட்டிர மன்னர் வழிபாடு தெய்வமாகிய ஸ்ரீபவானி சந்திரமௌலீஸ்வரின் பெருமையும், குறத்தி தன் மலைவளம் கூறுதல், குறவன் குறத்தி உரையாடல், குறத்தி குறி உரைத்தல் ஆகியவையோடு சங்கீதமும், அபிநயமும் நடனமும் கலந்து வரும் ஒரு நாடக நூல் குறவஞ்சி எனும் சிற்றிலக்கிய வகைமையில் குற்றாலக் குறவஞ்சிக்கு அடுத்ததாக சரபேந்திர பூபாலக் குறவஞ்சி சிறப்பு பெற்றது. அறுபது தமிழ் வருடப் பெயர்களில் 19 பெயர்கள் இடம்பெறும் பாடல் புகழ் பெற்றது.

**சரபேந்திர பூபாலக் குறவஞ்சி நாடகம்**

சரபேந்திரப் பூபாலக் குறவஞ்சி தஞ்சை பிரகதீஸ்வரர் கோயிலில் திருவிழாக்களில் நாட்டிய நாடகமாக நடிக்கப்பட்டு வந்தது. அஷ்டகோஷ்டி விழாக்காலங்களில் நிகழ்த்தப் பட்டதால் “அஷ்டகோஷ்டி குறவஞ்சி” எனும் அழைக்கப்பப்பட்டது.

**பாடல்நடை**

**குறத்தி மலைவளம் கூறல்**

“மானினொடு பன்றி மரை யொளிவிருந்து
கொல்வோம் வந்ததீர்த்தோர்
தங்களை மேன் மிஞ்சவிடோம் வெல்வோம்
கானகத்திற் கிழங்கான மருதப்பதனால் கொள்வோம்

- ––––––––––––––– ------------

மானமுள்ள சாதி நாமமுறு மாமிதனைத்
தாயெனவே மதிப்போம் நாதியெனுஞ்
சொல்லுரையோம் போற்றிடுவோம் நீதி”

**குறத்தி குறி சொல்லல்**

“கஞ்சமல ரானனத்தாய் குறிநான்
சொல்வதோ என் கருத்திலிருந்து
உரைக்கின்றாள் எக்கால தேவி
தஞ்சை நகர் தனில் வாழ்வான் உலகத்தை
யாள்வோன் சரபோஜி மன்னவனா

- - – - - —- - - - - - - - - - - - - - - - - - - - - - -

இனியெனக்கு நீ மறைக்க வேண்டாம்

பெருவுடையார் அருளதனால் அவனைச் சேர்வாயே!”

என்னும் பாடல்களில் மொழிநடை சிறப்பாக உள்ளது.

**60 தமிழ் ஆண்டுகளில் 19 பெயர்கள்**

பல சிறப்பம்சங்களைத் தன்னகத்தே கொண்ட இந்தக் குறவஞ்சி இலக்கியம் மேலும் ஒரு சிறப்பைத் தன்னகத்தைத் கொண்டுள்ளது. மன்மதனை பிரஜா உற்பத்தி செய்பவன் என அழைத்து வரும் பகுதியில் தொடங்கி தமிழ் ஆண்டுகளின் பெயரை உள்ளடக்கி இயற்றப்பட்டுள்ளது.

“பிரபவனாகிப் பிரஜோற்பத்தி

செய்கின்ற மன்மதா……….”

என்று தொடங்கி

சரபோஜி மகராஜர் தமைநான் மருவச்

செய் மன்மதா - நீ சரவஜித்தாகி

மேல் அக்ஷயனாகுவாய் மன்மதா”

என்று முடியும் பாடலில்,

பிரபவ, பிரஜோற்பத்தி, மன்மத, பரிதாபி,

தந்துபி, விரோதி, துன்மதி, காளயுக்தி,

விஜய, விக்ருதி, ஜய, ஆனந்த, பிரமாதி,

ஈஸ்வர, குரோதி, கீலக, சித்திரபானு, சர்வஜித்,

அக்ஷய ஆகிய 19 வருடங்களின் பெயர்கள் அமைந்துள்ளன

**முடிவுரை**

மன்னனைத் தலைவனாகக் கொண்டு இயற்றப்பட்ட சரபேந்திர பூபாலக் குறவஞ்சி நூலின் அமைப்பும் பாட்டுடைத் தலைவன் பற்றிய செய்திகளும் தஞ்சை மண்ணுக்கும் தமிழுக்கும் பெருமை சேர்க்கும் வண்ணம் அமைந்துள்ளது. தமிழரின் பண்பாட்டுச் செல்வத்தை மிகுதியாகக் கொண்ட நாடக மரபில் சரபேந்திர பூபாலக் குறவஞ்சி இலக்கியமும் தனக்கென தனி இடத்தைப் பெற்றுள்ளது. மேலும் தமிழுக்கு நல்லதொரு நாடக மரபு வளர்ந்து வந்ததையும் அறிய முடிகிறது.

**துணைநின்ற நூல்கள்**

1. ஏ.என்.பெருமாள் - தமிழ்நாடகத்தின் தோற்றமும் வளர்ச்சியும் தனியகம் வெளியீடு சென்னை - 1977
2. நா.முகம்முது செரிபு, நாடகத்தமிழ், முன்னேற்ற வெளியீடு, மானாமதுரை- 1975
3. சம்பந்த முதலியார், பம்மல் - நாடகத்தமிழ் இந்தியா அச்சுக்கூடம், சென்னை – 1933